யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# தடம் THADAM

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI Junary - Apirl - 2011 VOLUME 4 ISSUE 1

## நிறுவுநர் நாள்




நிகழ்வின் விருந்தினர்கள்

எமது கல்லூரியின் நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்களின் அர்ப்பணிப்பான உயரிய பணியினை நினைவு கூருமுகமாக ஒவ்வொரு வருடமும் கல்லூரியின் முதல் நிகழ்வாக இடம்பெறும் நிறுவுநர் தினம் இம்முறையும் 05.02.2011 சனிக்கிழமை காலை 09 மணிக்கு எமது கல்லூரி அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக திரு ப.விக்கினேஸ்வரன் (மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வடக்கு மாகாணம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். நிறுவுநர் நினைவுப் பேருரையை வைத்திய கலாநிதி சா.சிவயோகன் (வைத்தியநிபுணர், போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) அவர்கள் நிகழ்த்தினார். எமது கல்லூரிச் சஞ்சிகை தாமோதரன் ஒவ்வொரு வருடமும் நிறுவுநர் நாளில் வெளியிடப்பட்டு வருகின்றது. இம்முறை பதினைந்தாவது தாமோதரன் சஞ்சிகை வெளியிடப்பட்டது. வெளியீட்டுரையை பேராசிரியர் கி.விசாகரூபன் (தலைவர் - தமிழ்த்துறை யாழ்/பல்கலைக்கழகம்) அவர்கள் சிறப்புற நிகழ்த்தினார்.

தலைமையுரையை நிகழ்த்திய அதிபர் அவர்கள் தமது உரையிலே... நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்களின் பரந்த நோக்கும் தர்ம சிந்தையும் இன்று பெருவிருட்சமாக இந்துக் கல்லூரி வளர்வதற்கு அடிப்படையாக அமைந்தன. இக்கல்லூரியின் மாணவர்கள் உலகின் பல பாகங்களிலும் பிரகாசித்துக் கொண்டிருப்பதுடன் எமது கல்லூரியின் பெருமையை உலகறியச் செய்து கொண்டிருக்கின்றனர் என்றார்.



முதன்மை விருந்தினர் அவர்கள் தாமோதரன் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியை எமது கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு இ.கயிலைநாதன் அவர்கள் பெற்றுச் சிறப்பித்தார். முதன்மை விருந்தினர் திரு ப.விக்கினேஸ்வரன் அவர்கள் தமது உரையிலே எமது கல்லூரியின் தரச் சான்றுகளை எடுத்துக் கூறினார். அதிவிசேட தகைமை பெற்ற மாணவன் ஸ்ரீ.விசாகன் கொழும்பு பல்கலைக்கழக அனுமதி பெற்று மருத்துவத்துறைக்குச் செல்வதும், தேசிய

மட்டத்திலே இந்துக் கல்லூரி மாணவி ஸ்ரீ.ரம்யா கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் பரிசில் பெறுவதும் தமிழ் மொழித்தினப் போட்டியிலே தேசிய மட்டததில் மாணவன் இ.இராஜப்பிரவிந்தன் முதலிடம் பெற்றமையும் இக்கல்லூரியின் உயர்தகைமைச் சான்றுகள் என்பதைச் சிறப்பாகக் குறிப்பிட்டார்.

கற்றலை ஆளும் கர்த்தாக்கள் - இடை நிலைக்கல்வி வினையாற்றல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியதொரு பார்வை என்ற தலைப்பிலான நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்றிய வைத்திய கலாநிதி சா.சிவயோகன் அவர்கள், கல்விசார் வினை யாற்றல்களில் செல்வாக்குச் செலுத்தும் தனியார் சார்ந்த காரணிகள், பாடசாலை சார்ந்த காரணிகள், பெற்றோர் சார்ந்த காரணிகள், சூழல் சார்ந்த காரணிகள் என்ற வகைப்பாட்டின் கீழ் இன்றைய காலத்தின் தேவை கருதியதாக தமது உரையை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

எமது கல்லூரிச் சஞ்சிகை தாமோதரன் சகல அம்சங்களிலும் சிறப்புற வடிவமைக்கப் பட்டுள்ளமை பற்றி எடுத்துக் கூறிய பேராசிரியர் கி.விசாகரூபன் அவர்கள் ஆசிரியர்களின் ஆக்கங்கள் காலத்தின தேவை கருதி சிறப்புற அமைந்துள்ளமை பற்றிக் குறிப்பிட்டு மாணவர்களின் ஆக்கங்களின் சிறப்பான தரம் பற்றி வியந்து கூறினார். எதிர்காலத்தில் சிறந்த பாடைப்பாளிகளை உருவாக்குகின்ற களமாக இந்துக் கல்லூரி விளங்குகின்றமை பாராட்டப்பட வேண்டிய அம்சம் என்றார்.

எமது கல்லூரி ஆசிரியை திருமதி கமலாம்பிகை ஸ்ரீதரன் அவர்கள் பதிலுரை நிகழ்த்தினார். பிரதி அதிபர் திரு ந.பாலச்சந்திரன் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிறுவுநர் நாள் துணை அதிபர் திரு சி.த.இரத்தினம் அவர்களின் நன்றியுரையுடன் இனிது நிறைவு பெற்றது.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி- 2011

எமது கல்லூரியின் இவ்வாண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் 15.02.2011 அன்று பி.ப 1.30 மணிக்கு கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு கு.பிறேமகாந்தன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக எமது கல்லூரிப் பழைய மாணவரும், யாழ்/வலயக் கல்வி அலுவலகக் கணக்காளருமாகிய திரு க.கமலரூபன் அவர்களும், கௌரவ விருந்தினராக பிரபல வர்த்தகரும், சமூக சேவையாளருமாகிய E.S.P நாகரத்தினம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.
இம்முறை புதிய மாற்றங்களுடன் மிகச் சிறந்த முறையிலே இல்ல மெய்வல்லுநர் போட்டி



நடைபெற்றது. ஆண், பெண் இருபாலாரின் பான்ட் வாத்திய அணியும் ஒருங்கு சேர்ந்து களத்தில் இறங்கியமை சிறப்பான அம்சமாகும்.

பிரதமவிருந்தினர் தமது உரையிலே தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னுதாரணமாக இந்துக்கல்லூரி பிரகாசிக்க வேண்டும் என்றும், மாணவர்களின் பயிற்சிக்குரிய காலங்களில் பெற்றோரும் மாணவர்களை ஒழுங்காக அனுப்பி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டதுடன் தான் இக்கல்லூரியில் கற்ற காலங்களை நினைவு கூர்ந்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் தமது உரையிலே சரியான முறையிலே விளையாட்டில் ஈடுபடும் எந்த மாணவனும் கல்வியிலே ஒருபோதும் குறைவடைவதில்லை. மூளைவளர்ச்சி, அதன் செயற்றிறன் என்பன விருத்தியடைவதற்கும் சிறந்த ஆளுமை விருத்திக்கும் விளையாட்டு மிகவும் அவசியமானது என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வெண்டும் என்றார்.

இடைவேளை நிகழ்ச்சியும் மிகவும் சிறப்பாக அமைந்ததாக அனைவரும் பாராட்டிச் சென்றனர். 438 1/2 புள்ளிகளைப் பெற்று இம்முறை ஆனந்தா இல்லம் முதலாம் இடத்தைப்

பெற்றுக் கொண்டது.

| | |
|---|---|
| முத்துக்குமாரு இல்லம் | 338 புள்ளிகள் |
| ஸ்ரீசுமங்கலா இல்லம் | 314 புள்ளிகள் |
| தாமோதரம் இல்லம் | 291 புள்ளிகள் |
| நேரு இல்லம் | 254 1/2 புள்ளிகள் |

இல்லங்களுக்கிடையேயான அணி நடைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஸ்ரீசுமங்கலா, ஆனந்தா, முத்துக்குமாரு என்பன முறையே 1ஆம், 2ஆம் 3ஆம் இடங்களைப் பெற்றன. பெண்கள் பிரிவில் ஆனந்தா, முத்துக்குமாரு, ஸ்ரீசுமங்கலா என்பன முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றன.

அஞ்சல் ஓட்ட நிகழ்விற்கான வெற்றிக் கிண்ணத்தை ஆனந்தா இல்லம் பெற்றுக் கொண்டது.

### சிறந்த் விளையாட்டு வீரர் வீராங்க னைகள்

13 வயது ஆண் K.அக்சன் - தாமோதரம் இல்லம்
13 வயது பெண் P.விதுஷா - தாமோதரம் இல்லம்
15 வயது ஆண் சி.சாருப்பிரியன் - நேரு இல்லம்
15 வயது பெண் ஆ.றக்சகி - முத்துக்குமாரு இல்லம்
15 வயது பெண் S.அபிராமி - தாமோதரன் இல்லம்
17 வயது ஆண் R.கிரிசாந் - ஆனந்தா இல்லம்
17 வயது ஆண் A.ஸ்ரெலின்றொக்சன் - தாமோதரம் இல்லம்
17 வயது ஆண் த.அஜிந்தன் - முத்துக்குமாரு இல்லம்
17 வயது ஆண் ஜெ.நிதர்சன் - ஸ்ரீசுமங்கலா இல்லம்
17 வயது ஆண் சி.டினோசன் - ஆனந்தா இல்லம்
17 வயது பெண் P.கார்த்திகா - நேரு இல்லம்
19 வயது ஆண் N.வினோதன் - ஆனந்தா இல்லம்
19 வயது ஆண் R.அகல்யா - முத்துக்குமாரு இல்லம்
21 வயது ஆண் S.அகிலன் - முத்துக்குமாரு இல்லம்
21 வயது ஆண் S.சயந்தன் - தாமோதரம் இல்லம்
21 வயது ஆண் M.றெட்மன்டெல்சன் - ஆனந்தா இல்லம்
21 வயது பெண் J.நிறோஜினி - நேரு இல்லம்
21 வயது பெண் M.தாளினி - ஸ்ரீ சுமங்கலா இல்லம்

## வீதி ஓட்டமும், வேக நடையும்



இவ்வருடம் மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு ஆண்களுக்கான 12 கிலோ மீற்றர் வீதி ஓட்டமும் பெண்களுக்கான 3000 மீற்றர் வேக நிடைப் போட்டியும் இடம்பெற்றது. இதற்கு IDM கணனி நிறுவனமும், நியூ சிவாசினி வியாபார நிலையமும் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக் கதாகும். இப்போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்

### வீதி ஓட்டம்

T.அஜிந்தன் - முத்துக்குமாரு இல்லம் 1ம் இடம்
T.பிருந்தாபன் - தாமோதரம் இல்லம் 2ம் இடம்
சு.சுகர்சன் - ஸ்ரீசுமங்கலா இல்லம் 3ம் இடம்

### வேகநடைப் போட்டி

T.துவாரகா - ஸ்ரீசுமங்கலா இல்லம் 1ம் இடம்
S.ஜனனி - ஆனந்தா இல்லம் 2ம் இடம்
S.கேதுசா - ஸ்ரீசுமங்கலா இல்லம் 3ம் இடம்
T.தீபா - முத்துக்குமாரு இல்லம் 3ம் இடம்

### கிரிக்கெட்

19 வயது ஆண் - நேரு இல்லம்
19 வயது பெண் - ஆனந்தா இல்லம்

### கரம்

15 வயது ஆண் - ஸ்ரீசுமங்கலா இல்லம்
15 வயது பெண் - முத்துக்குமாரு இல்லம்
19 வயது பெண் - முத்துக்குமாரு இல்லம்
19 வயது பெண் - ஆனந்தா, தாமோதரம் இல்லம்

### பட்மின்ரன்

19 வயது ஆண் - முத்துக்குமாரு இல்லம் 1ம் இடம்
19 வயது பெண் - நேரு இல்லம் 1ம் இடம்

### மேசைப்பந்து

19 வயது ஆண் - தாமோதரம் இல்லம் 1ம் இடம்
19 வயது பெண் - ஸ்ரீசுமங்கலா இல்லம் 1ம் இடம்

### கரப்பந்து

15 வயது ஆண் - நேரு இல்லம்
15 வயது பெண் - தாமோதரம் இல்லம்
17 வயது ஆண் - முத்துக்குமாரு இல்லம்
17 வயது பெண் - ஆனந்தா இல்லம்
19 வயது ஆண் - ஆனந்தா இல்லம்
19 வயது பெண் - ஸ்ரீசுமங்கலா இல்லம்

### வலைப்பந்து

15 வயது பெண் - தாமோதரம் இல்லம்
17 வயது பெண் - ஆனந்தா இல்லம்
19 வயது பெண் - முத்துக்குமாரு இல்லம்

## சதுரங்கம்

15 வயது ஆண் - முத்துக்குமாரு இல்லம்
15 வயது பெண் - முத்துக்குமாரு இல்லம்
19 வயது ஆண் - ஸ்ரீசுமங்கலா இல்லம்
19 வயது பெண் - முத்துக்குமாரு இல்லம்

### தென்மராட்சிக் கல்வி வலய இல்ல மெய்வல்லுநர் போட்டி – 2011

அண்மையில் யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலயத்தில் நடைபெற்ற வலய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் எமது கல்லூரி அதி கூடிய புள்ளிகள் பெற்று முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டது. அஞ்சலோட்ட நிகழ்ச்சியில் 97 புள்ளிக்ள பெற்று அஞ்சலோட்ட வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டது.



வலய நிலையில் வீர வீராங்கனைகளாக தெரிவு செய்யப்பட்டோர்.

17 வயது அ.றொக்ஷன்
17 வயது இ.கிரிசாந்
21 வயது ம.றெட்மன்டெல்சன்
13 வயது பெண் வி.விதுஷா

2011 ஆம் ஆண்டு இதுவரை நடைபெற்ற வலய மட்டப் போட்டிகளில் எமது கல்லூரியின் சாதனைகள்

**உதைபந்தாட்டம் (2010 ஆம் ஆண்டுக்கானது)**

15 வயது அண் - 1ம் இடம்
19 வயது ஆண் - 1ம் இடம்
19 வயது பெண் - 2ம் இடம்

### பூப்பந்தாட்டம்

19 வயது ஆண் - 1ம் இடம்
19 வயது பெண் - 2ம் இடம்

**மேசைப்பந்தாட்டம்**

19 வயது ஆண் - 2ம் இடம்
19 வயது பெண் - 2ம் இடம்

**சதுரங்கம்**

15 வயது பெண் - 1ம் இடம்
15 வயது ஆண் - 2ம் இடம்
19 வயது ஆண் - 1ம் இடம்

சாதனையாளர்களான இம்மாணவர் களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டு கின்றோம். மேலும் வெற்றிகள் பெற வாழ்த்து கின்றோம்.

### எமது கல்லூரி விளையாட்டுச் செயற்குழு

அதிபர் - திரு அ.கயிலாயபிள்ளை
பிரதி அதிபர் - திரு ந.பாலச்சந்திரன்
துணை அதிபர் - திரு சி.த.இரத்தினம்
திரு த.இரகுலேசன் - செயலாளர்
திருமதி சி.திருவாசகன் - உபசெயலாளர்
திரு த.பாலசண்முகநாதன்
திரு வே.உதயகுமார்
திரு சி.சண்முகானந்தசர்மா
திரு ந.இரவிக்குமார்
செல்வி இ.நடராசா
திரு கு.சசிதரன்
திரு பா.மதனரூபன்
திரு ப.சுரேஸ்
திருமதி கு.சுதமதி
திருமதி வ.சுகிரதன்

எமது கல்லூரி விளையாட்டுச் செயற் குழுவினரின் அயராத முயற்சியும் அர்ப் பணிப்பான சேவையுமே விளையாட்டுத் துறையிலே எமது கல்லூரி சாதனைகள் படைக்க உறு துணையாக அமைந்துள்ளன. இவ்வணியிலே இணைந்துள்ள புதிய ஆசிரியர்களான திரு பா.மதனரூபன் திரு ப.சுரேஸ் ஆகியோரின் பயிற்சியும், முயற்சியும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். இளம் ஆசிரியர்களின் முயற்சிகளைப் பாராட்டுவதுடன் மேலும் அனைவரதும் அர்ப்பணிப பான பணிகளையும் தடம் செய்தி ஏட்டினூடாக பாராட்டுவதில் மகிழ்வடைகின்றோம்.

**வலய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம் - 2011**

100மீற்றர் ஓட்ட நிகழ்வு

| | | |
|---|---|---|
| 13 வயது ஆண் | சி.லோஜிதன் | 1ம் இடம் |
| 17 வயது ஆண் | கி.கிரிசாந் | 1ம் இடம் |
| 17 வயது ஆண் | த.வைஸ்ணவன் | 2ம் இடம் |
| 19 வயது ஆண் | வி.டினோஜன் | 2ம் இடம் |

19 வயது ஆண் ஆ.சுஜீவன் 3ம் இடம்
21 வயது ஆண் ம.றெட்மன்டெல்சன் 1ம் இடம்
13 வயது பெண் வி.விதுர்ஷா 2ம் இடம்
13 வயது பெண் கி.சாருஜா 3ம் இடம்
17 வயது பெண் த.தர்ஷிகா 2ம் இடம்
19 வயது பெண் த.பவிசியா 3ம் இடம்

### 200 மீற்றர் ஓட்டம்

15 வயது ஆண் தெ.யதுர்சன் 3ம் இடம்
17 வயது ஆண் இ.கிரிசாந் 1ம் இடம்
19 வயது ஆண் சு.றெனிஸ்ரன் 1ம் இடம்
19 வயது ஆண் ந.வினோதன் 2ம் இடம்
21 வயது ஆண் ம.றெட்மன் டெல்சன் 1ம் இடம்
15 வயது பெண் ம.ரட்சகி 1ம் இடம்
17 வயது பெண் சி.பைரவி 2ம் இடம்
21 வயது பெண் இ.துனேகா 2ம் இடம்

### 400 மீற்றர் ஓட்டம்

15 வயது ஆண் தெ.யதுர்சன் 2ம் இடம்
15 வயது ஆண் உ.விதுசன் 3ம் இடம்
17 வயது ஆண் த.அஜிந்தன் 1ம் இடம்
17 வயது ஆண் த.வைஸ்ணவன் 2ம் இடம்
19 வயது ஆண் சு.றெனிஸ்ரன் 1ம் இடம்
19 வயது ஆண் ந.வினொதன் 2ம் இடம்
17 வயது பெண் சி.கீர்த்தனா 2ம் இடம்
21 வயது பெண் சி.தர்சினி 1ம் இடம்

### 800 மீற்றர் ஓட்டம்

17 வயது ஆண் த.அஜிந்தன் 1ம் இடம்
17 வயது பெண் ச.ஜனனி 3ம் இடம்
19 வயது பெண் கி.தஜியா 2ம் இடம்
21 வயது பெண் ச.தர்சினி 1ம் இடம்

### 1500 மீற்றர் ஓட்டம்

17 வயது ஆண் ஜெ.நிதர்சன் 2ம் இடம்
19 வயது ஆண் து.நேசராஜ் 2ம் இடம்
21 வயது பெண் ஞ.துனேகா 3ம் இடம்

### 5000 மீற்றர்

19 வயது ஆண் த.பிருந்தாபன் 2ம் இடம்
19 வயது பெண் இ.தஜிதா 2ம் இடம்

### நீளம் பாய்தல்

13 வயது ஆண் த.அபிதன் 2ம் இடம்
17 வயது ஆண் இ.கிரிசாந் 1ம் இடம்
21 வயது ஆண் எஸ்.சுயந்தன் 1ம் இடம்
13 வயது பெண் வி.விதுர்ஷா 2ம் இடம்
13 வயது பெண் ப.கிருஜா 3ம் இடம்
15 வயது பெண் நி.சங்கவி 1ம் இடம்
15 வயது பெண் ம.ரட்சகி 2ம் இடம்
17 வயது பெண் ப.கார்த்திகா 2ம் இடம்
19 வயது பெண் சு.அகல்யா 1ம் இடம்
19 வயது பெண் லோ.மயூரதி 2ம் இடம்
21 வயது பெண் செ.கஜீபா 2ம் இடம்
21 வயது பெண் ஜெ.நிரோஜினி 3ம் இடம்

### உயரம் பாய்தல்

13 வயது ஆண் ச.கேசவன் 1ம் இடம்
13 வயது ஆண் என் துவாரகன் 3ம் இடம்
15 வயது ஆண் சி.இளங்குமரன் 3ம் இடம்
17 வயது ஆண் ஜெ.நிதர்சன் 1ம் இடம்
17 வயது அண் சி.டினேசன் 2ம் இடம்
19 வயது ஆண் ப.சஜீவன் 3ம் இடம்
21 வயது ஆண் எஸ்.தரச்ன 1ம் இடம்
11 வயது ஆண் எஸ்சுயந்தன் 2ம் இடம்
13 வயது பெண் வி.விதுர்ஷா 1ம் இடம்
13 வயது பெண் பா.கிருஜா 2ம் இடம்
15 வயது பெண் சி.பிரியங்கா 1ம் இடம்
17 வயது பெண் செ.ஸ்ரீனுயா 1ம் இடம்
21 வயது பெண் ஜெ.வனிதா 1ம் இடம்

### தடைதாண்டல்

15 வயது ஆண் தெ.யதுர்சன் 1ம் இடம்
15 வயது ஆண் எம்.ஸ்றீபன்ராஜ் 2ம் இடம்
17 வயது ஆண் அ.ஸ்ரீன்ரொக்சன் 1ம் இடம்
19 வயது ஆண் ரி.மயூரராஜ் 2ம் இடம்
21 வயது ஆண் ம.ரெட்மன்டெல்சன் 1ம் இடம்
15 வயது பெண் கோ.டினா 1ம் இடம்
17 வயது பெண் கு.கலைமகள் 2ம் இடம்

### குண்டு போடுதல்

17 வயது ஆண் சி.சுரேஷ்கீதன் 1ம் இடம்
17 வயது ஆண் நா.துர்க்காதரன் 3ம் இடம்
19 வயது ஆண் ஆ.சஜீபன் 1ம் இடம்
15 வயது பெண் ஆ.தாட்சாயினி 3ம் இடம்
21 வயது பெண் எல் யர்சினி 2ம் இடம்

### தட்டெறிதல்

15 வயது ஆண் சி.கிருப்பிரியன் 2ம் இடம்
19 வயது ஆண் ஆ.சஜீபன் 1ம் இடம்
17 வயது பெண் க.கவிநிலா 2ம் இடம்
17 வயது பெண் த.தர்ணிகா 3ம் இடம்
19 வயது பெண் சி.இந்துசா 1ம் இடம்
21 வயது பெண் வு.சயானிகா 1ம் இடம்

### ஈட்டி எறிதல்

15 வயது ஆண் ம.ஸ்ரீபன்ராஜ் 1ம் இடம்
17 வயது ஆண் எஸ்.றொக்சன் 1ம் இடம்
15 வயது பெண் க.காயத்திரி 2ம் இடம்
17 வயது பெண் க.கவிநிலா 2ம் இடம்
21 வயது பெண் கே.நிரோஜினி 1ம் இடம்

### முப்பாய்ச்சல்

17 வயது ஆண் சி.டினோசன் 1ம் இடம்
19 வயது ஆண் நா.நிதர்சன் 3ம் இடம்
21 வயது ஆண் எஸ்.தர்சன் 1ம் இடம்
17 வயது பெண் த.சுபேதா 1ம் இடம்
17 வயது பெண் ப.கார்த்திகா 3ம் இடம்

19 வயது பெண் லோ.மயூரதி 2ம் இடம்
21 வயது பெண் கே.நிரோஜினி 3ம் இடம்

**கோலூன்றிப் பாய்தல்**

17 வயது ஆண் ப.கபில்ராஜ் 1ம் இடம்
17 வயது ஆண் ம.சுலக்சன் 2ம் இடம்
19 வயது ஆண் ச.வேணுகானன் 1ம் இடம்
21 வயது ஆண் எஸ்.சுயந்தன் 1ம் இடம்
21 வயது ஆண் எஸ்.தர்சன் 2ம் இடம்
21 வயது பெண் ஜெ.வனிதா 1ம் இடம்

**4x100 அஞ்சல்**

13 வயது ஆண் 2ம் இடம்
15 வயது ஆண் 2ம் இடம்
17 வயது ஆண் 1ம் இடம்
19 வயது ஆண் 1ம் இடம்
21 வயது ஆண் 1ம் இடம்
15 வயது பெண் 1ம் இடம்
17 வயது பெண் 1ம் இடம்
19 வயது பெண் 1ம் இடம்
21 வயது பெண் 2ம் இடம்

**4x400 அஞ்சல்**


15 வயது ஆண் 2ம் இடம்
17 வயது ஆண் 1ம் இடம்
19 வயது ஆண் 1ம் இடம்
21 வயது ஆண் 1ம் இடம்
17 வயது பெண் 2ம் இடம்
19 வயது பெண் 1ம் இடம்
21 வயது பெண் 1ம் இடம்

வெற்றி பெற்ற மாணவர்களையும் அயராது அரும்பாடுபட்டுப் பயிற்றுவித்த விளையாட்டுத்துறை ஆசிரியர்களையும் தடம் செய்தியேட்டினூடாகப் பாராட்டுகின்றோம்.

## நாணயக் கண்காட்சி

கடந்த 02.02.2011 அன்று எமது கல்லூரியில் நாணயக் கண்காட்சியொன்று நடைபெற்றது. இலங்கை பசறையைச் சேர்ந்தவரும் சென்னை பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் அரச அறிவியல்துறை பேராசிரியருமான S.S.S அந்தோனிசாமி அவர்களால் இக்கண்காட்சி எமது கல்லூரி T.V மண்டபத்தில் மிகவும் சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. 216 நாடுகள் தொடர்பான புராதன, புதிய நாணயங்கள் பார்வைக்காக சிறந்த ஒழுங்கமைப்பில் வைக்கப்பட்டிருந்தன. சகல துறை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இக்கண்காட்சி அமைந்திருந்தது. கின்னஸ் சாதனையாளர் பட்டியலில் தானும் இடம்பெற வேண்டும் என்று முயற்சிக்கும் பேராசிரியர் அந்தோனிசாமி அவர்களது எண்ணம் ஈடேற நாமும் வாழ்த்துகின்றோம்.


## கண்காட்சி



எமது கல்லூரி ஆசிரியர் திரு S.ஜெசிந்தன் அவர்களால் 17.03.2011 அன்று எமது கல்லூரி T.V மண்டபத்தில் தரம் 10 மாணவர்களின் வரலாற்றுப் பாடக் கண்காட்சியொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. கல்லூரி அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்துச் சிறப்பித்தார். இக் கண்காட்சியில் வரலாற்றுப் பாடம் தொடர்பான வரைபடங்கள், சிலை ஆக்கங்கள், கட்டுரை ஆக்கங்கள், ஒப்படைகள், எண்ணக்கரு விளக்கப படங்கள் எனப் பல்வேறு வகையான மாணவர்கள் ஆக்கங்கள் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. மாணவர்களின் வரலாற்றுப்பாட மேம்பாட்டுச் செயற்றிட்டம் என்ற வகையில் சிறந்ததொரு முன்மாதிரியாக அமைந்தி ருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்ச மாகும். இதனை ஒழுங்கமைத்த ஆசிரியர் திரு S.ஜெசிந்தன் அவர்களையும் தரம் 10 மாணவர்களின் முயற்சியையும் தடம் செய்தி ஏட்டினூடாகப் பாராட்டுவதோடு மேலும் இவர்கள் முயற்சிகள் செயலுருப் பெற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

## இலங்கை வரலாறு நூல் அறிமுகம்

எமது கல்லூரி ஆசிரியர் திரு கு.சுதாகரன் அவர்களால் தொகுக்கப்பட்ட இலங்கை வரலாறு தொடர்பான 1000 வினா விடைகள் அடங்கிய நூல் அறிமுக நிகழ்வு எமது கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு இரவிச்சந்திரன் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.



ஆசிரியர் திரு கு.சுதாகரன் அவர்களின் இந்த நூலாக்க முயற்சியைப் பாராட்டிய அதிபர் அவர்கள் இன்றைய கல்வி முறையில் மாணவர்களின் தேடலுக்குத் துணையாக இந்நூல் பேருதவிபுரியும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை என்று குறிப்பிட்டார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இரவிச்சந்திரன் அவர்கள் தமது வாழ்த்துரையில் இன்றைய காலத் தேவையுணர்ந்து மாணவர்களின் பாட அடைவு மேம்பாட்டிற்கு உசாத்துணையாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார். மாணவர்கள் இலங்கை வரலாறு பற்றிக் கற்கின்ற வேளையில் பல தகவல்களைத் தேடவேண்டிய தேவை இன்றுள்ளது. நீண்டகாலமாகத் தாம் தேடித் தொகுத்த இவ்விடயங்களை நூலாகத் தொகுத்து இங்கு ஆசிரியர் வழங்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்க ஒரு விடயம் எனக் குறிப்பிட்டார். எமது கல்லூரி ஆசிரியையும், பகுதித் தலைவருமான திரு செ.செல்வராஜா அவர்கள் நூல் பற்றிய அறிமுக உரையை நிகழத்தினார். கால அடிப்படையில் வகைப்படுத்தி மிகவும் செம்மையான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்களும் விடைகளுமாக இலங்கை வரலாறு இங்கு பரிணமித்துள்ளது சிறப்பம்சம் எனக் குறிப்பிட்டார்.

மேலும் பிரதி அதிபர் திரு ந.பாலச்சந்திரன், உப அதிபர் திரு சி.த.இரத்தினம் மற்றும் பகுதித்தலைவர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். நூலாசிரியர் திரு கு.சுதாகரன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

## விஞ்ஞான வினாவிடைப் போட்டி


யாழ் பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே கடந்த வருடம் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் எமது கல்லூரி அணியும் பங்குபற்றியது. எமது அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டபோதும், பொது அறிவு ரீதியான எழுத்துப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் வரிசையில் எமது கல்லூரி மாணவர் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த 22.12.2010 அன்று விவசாயபீட பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பங்குபற்றிய மாணவர் விபரம்

சிறீகரன் யசோதரன்
ஜெயகணேசன் ஜெயதர்சினி
சரவணமுத்து சபேசன்
சிறீமுருகதாஸ் விசாகன்
முத்துலிங்கம் சுமன்

கலந்து கொண்ட அனைத்து மாணவர்களிலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று சரவணமுத்து சபேசன் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். இம்மாணவர்கள் மேலும் உயர்வு பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

## விஞ்ஞான செய்முறைப் பட்டறை



கடந்த 23.03.2011 அன்று எமது கல்லூரியில் ஆசிரியர் திரு ச.அகிலன் அவர்களின் வழிகாட்டலில் தரம் 11A வகுப்பு மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட விஞ்ஞான செய்முறைப் பட்டறை நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்நிகழ்வை எமது பிரதி அதிபர் திரு ந.பாலச்சந்திரன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். எமது கல்லூரியின் அனைத்து விஞ்ஞான பாட ஆசிரியர்களும், பகுதித் தலைவர்களும், தரம் 11 மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். தரம் 11 மாணவர்கள் க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் விஞ்ஞான செய்முறைத் திறன்கள் தொடர்பான வினாக்களுக்கு உச்சப்புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவும் ஒவ்வொரு மாணவனதும் தனிப்பட்ட செய்முறைத் திறன்களை வளர்த்தெடுப்பதையும் பிரதான நோக்கமாகக் கொண்டு இச் செய்முறைப் பட்டறை ஒழுங்கமைக்கக்பட்டிருந்தது. தரம் 10, 11 மாணவர்களின் விஞ்ஞான பாடத்திலுள்ள சகல செய்முறைகளையும் மாணவர் குழுக்களாக இணைந்து ஒழுங்கமைத்து விளக்கமளித்தனர்.

இம்மாணவர்களின் தலைமைத்துவம் ஆற்றல்கள், மிகுந்த ஈடுபாட்டுடனான பங்கேற்பு, ஊக்கம், செய்முறையிலுள்ள விருப்பு என்பன மெச்சத்தக்க வகையில் அமைந்திருந்தன என்று அனைவரும் பாராட்டிச் சென்றனர். ஆசிரியர் திரு ச.அகிலன் அவர்களின் இம்முயற்சி பாடமேம்பாடு தொடர்பான செயற்றிட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் ஏனையோருக்கும் முன்மாதிரியாகவும் அமைந்த தொன்றாகும். இதில் ஆர்வத்துடன் பங்கேற்று பயிற்சி பெற்ற மாணவர்களையும் இவர்களை நெறிப்படுத்திய திரு ச.அகிலன் ஆசிரியர் அவர்களையும் தடம் செய்தியேட்டினூடாக பாராட்டு வதில் பேருவகை அடைகின்றோம். மேலும் இவர்கள் செயற்றிறன் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

## மாணவன் சாதனை

மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசிய ஒலிம்பியாட் போட்டியில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பினை எமது கல்லூரி தரம் 6 மாணவன் செல்வன் அச்சுதன் கீர்த்தனன் பெற்றுள்ளார். இவருக்கான தேசிய நிலைப் போட்டி 09.04.2011 அன்று கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இம்மாணவனை தடம் செய்தி ஏட்டினூடாகப் பாராட்டுகின்றோம் மேலும் உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

## சித்திரப் போட்டி - 2010

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சித்திரப் போட்டியில் பிரிவு I இல் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தை எமது கல்லூரி மாணவன் செல்வன் A.கோபிகன் பெற்றுள்ளார். பிரிவு III இல் யாழ்மாவட்டத்தில் செல்வன் வு.பிரசாந் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர்களுக்கான பரிசில்கள் 26.12.2010 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் வழங்கப் பெற்றது. இம்மாணவர்களையும் பயிற்றவித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

### தேசிய தகவல் தொழில்நுட்ப விருது - 2009

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் பாடசாலைகளின் செயற்றிறனை மதிப்பீடு செய்து விருது வழங்கும் நோக்குடன் 2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் பின்னரான தொடர் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அம் மதிப்பீடுகளின் அடிப்படையில் எமது கல்லூரி 80.75 புள்ளிகள் பெற்று வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் வகுதி A பாடசாலைகளில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இதன் பிரகாரம் எமது கல்லூரிக்கு ரூபா 1.50 மில்லியன் பெறுமதியான விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதை எமது கல்லூரி ICT கற்றல், கற்பித்தல் துறையில் பயன்படுத்த முடியும். இவ்விருதை எமது கல்லூரி பெறுவதற்கு உறுதுணையாக விளங்கிய ICT துறை ஆசிரியர்களைப் பாராட்டுகின்றோம். மேலும் எமது கல்லூரி விருதுகள் பெற அவர்களது அர்ப்பணிப்பான பணியினை அவாவி நிற்கின்றோம்.

### தேசிய மட்டத்தில் சான்றிதழ்

கொழும்பு இந்துமன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியில் எமது கல்லூரி மாணவன் செல்வன் செ.சாரங்கன் (9A) 3ம் இத்தைப் பெற்று சான்றிதழையும் பரிசிலையும் பெற்றுக் கொண்டார். இவரைப் பாராட்டுவதோடு மேலும் வெற்றிகள் பெற வாழ்த்துகின்றோம்.

## உளம் நெகிழ்ந்து நினைவு கூருகின்றோம்

எமது கல்லூரியில் இருவருடங்களாக ஆசிரியராக அரும் பணியாற்றி கடந்த 25.03.2011 அன்று அமரத்துவமடைந்த அமரர் சம்பந்தன் சக்திதரன் அவர்களின் மறைவு எமது கல்லூரிக்கு பேரிழப்பாகும். கல்வியியல் கல்லூரி யில் விசேட கல்விக்கெனப் பயிற்றப்பட்டு எமது கல்லூரியில 17.07.2009 அன்று ஆசிரியராக கடமையேற்றவர்



அமரர் சகதுதரன் அவர்கள் குடியுரிமைக்கல்வி வரலாறு ஆகிய பாடங்களைச் சிறப்புறக் கற்பித்து மாணவர் உள்ளங்களை வென்றவர். ஆழ்ந்த சிந்தனையும், அமைதியான சுபாவமும் எந்நேரமும் புன்னகையுடன் பணியாற்றும் பண்பும் கொண்ட துடிப்புள்ள இளம் ஆசிரியனாக எமது கல்லூரியில் பணியாற்றியவர். தரம் 7 மாணவர்களைச் சிறப்புறப் பயிற்றுவித்து கடந்த வருடம் வாணிவிழாவிலே விவாத அரங்கிலே மாணவர்கள் சிறப்புறச் செயற்பட வித்திட்ட பெருமைக்குரியவர். விவாத அரங்குகளிலே நடுவராகவும், சிறந்த பேச்சாளனாகவும் பலராலும் இனங்காணப்பட்டவர். நிறைந்த கடவுள் பக்தியும், அனைத்துப் பணிகளையும் விருப்போடு செய்யும் மனப்பாங்கும் கொண்டவராகத் திகழ்ந்தவர் இருவருடங்கள் எமது கல்லூரியில் பணியாற்றிய போதும் ஆசிரியர் ச.சக்திதரன் அவரக்ளது பணி என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்து நினைவு கொள்ளத் தக்கதாகும். அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனை உளம் உருகி இறைஞ்சுகின்றோம்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் கடந்த 26.03.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதி அதிபர் திரு ந.பாலச்சந்திரன், திரு சி.த.இரத்தினம் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு க.குமாரவேல்ராஜா ஆகியோரும் பெருந்தொகையான பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் கூட்டத்திற்குச் சமூக மளித்திருந்தனர்.

நடப்பு வருட அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெற்றது. அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த (சா/த) ப் பெறுபேறுகளின் சிறப்பான சித்திவீத உயர்வு குறித்துத் திருப்தி தெரிவிக்கப்பட்டது. 2011 - 2012 ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் - அதிபர் | திரு அ.கயிலாயபிள்ளை |
| துணைத்தலைவர் - | திரு ந.பாலச்சந்திரன் |
| செயலாளர் - | திரு கா.சிவஞானசுந்தரம் |
| துணைச் செயலாளர் | திருமதி இராஜஜீவி சுந்தரலிங்கம் |
| பொருளாளர் | திரு பு.குகானந்தன் |

பெற்றோர் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர்
வைத்திய கலாநிதி ச.குகதாசன்
திரு ச.நந்தகுமார்
சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக்குருக்கள்
திரு தி.முருகதாஸன்
திரு ம.குமாரவேல்ராஜா
திருமதி செல்வராணி ஜெகதீசன்
திருமதி கமலேஸ்வரி ஞானச்சந்திரன்
திருமதி நளாயினி கண்ணதாசன்

ஆசிரியர் பிரதி நிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர்
திரு ஒ.விஜயதாசன்
திரு ந.ரவிக்குமார்
திருமதி வி.மகேந்திரன்
திருமதி க.ஸ்ரீதரன்
திரு வே.உதயகுமார்
திரு த.பாலசண்முகநாதன்

**நலன்விரும்பிகள்**
பேராசிரியர் க.கந்தசாமி
திரு செ.சபாரத்தினம்
திரு இ.கயிலைநாதன்

**கணக்காய்வாளர்**
திரு ம.தயாகுமாரன்

### யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் விபரம் – 2011

| | |
|---|---|
| தலைவர் | திரு அ.கயிலாயபிள்ளை (அதிபர்) |
| துணைத்தலைவர் | திரு ந.பாலச்சந்திரன் (பி.அதிபர்) |
| வலயக் கல்விப் பிரதி நிதி | திரு கோ.வரதராஜமூர்த்தி (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) |
| செயலாளர் | திரு சி.பத்மநாதன் |
| துணைச் செயலாளர் | திரு ஆ.தங்கவேலு (பழைய மாணவர் பிரதி நிதி) |
| பொருளாளர் | திரு க.சத்தியானந்தன் |
| தொழில்நுட்பக்குழு | திரு இ.பாலகிருஷ்ணன் |
| தொழில்நுட்பக் குழு | திரு க.திருக்குமார் (பழைய மாணவர் பிரதி நிதி) |

**பெற்றோர் பிரதி நிதிகள்**
திரு த.கிருபாகரன்
திரு யோ.ஜெயக்குமார்
திருமதி புஸ்பராணி சிவபாலன்

**ஆசிரியர் பிரதிநிகள்**
திரு க.உதயசங்கர்
திரு நா.ஸ்ரீகரன்
திரு சி.நந்தகுமார்
திருமதி வி.ஸ்ரீரவிகுலன்

பழைய மாணவர் பிதி நிதி
திரு த.மஞ்சுரன்

### க.பொ.த (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகள் – 2010

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகளை நோக்கும் போது எமது கல்லூரி மாணவர்கள் இருவர் எல்லாப் பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளனர். எட்டு மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளார். எனவே 4A யும் அதற்கு மேலும்

சித்தி பெற்ற மாணவர்கள் 54 பேராகும். சித்தி வீதத்தை நோக்கும் போது கடந்த வருடத்தை விட இம்முறை அதிகரித்த வீதத்தையே காட்டுவதாகவுள்ளது. குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

2009 இல் 84.5ஆகக் காணப்பட்ட கணித பாட அடைவு 2010 இல் 95.5% ஆக அதிகரித்துள்ளது. இது போன்றே 2009 இல் 54.7% மாகக் காணப்பட்ட ஆங்கில பாட அடைவு 2010 இல் 70.8% மாக அதிகரித்துள்ளது. விஞ்ஞான பாடம் 2009 இல் 74.6% மாகக் காணப்பட்டது. 2010 இல் 89.6% மாக அதிகரித்துள்ளது. ஏனைய பாடங்களிலும் அதிகரித்த சித்தி வீதத்தையே காணக் கூடியதாகவுள்ளது.

**பாடரீதியாக சித்தி அடைந்தோர் வீதம்**

| பாடம் | சித்தி வீதம் |
|---|---|
| சைவநெறி | 100% |
| கத்தோலிக்கம் | 100% |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 98.9% |
| ஆங்கிலம் | 70.8% |
| கணிதம் | 95.5.% |
| வரலாறு | 95.5% |
| விஞ்ஞானம் | 89.3% |
| வணிகமும் கணக்கீடும் | 93.9% |
| புவியியல் | 100% |
| குடியுரிமைக்கல்வி | 91.1% |
| சங்கீதம் | 100% |
| சித்திரம் | 100% |
| நடனம் | 100% |
| ஆங்கில இலக்கியம் | 81.8% |
| தமிழ் இலக்கியம் | 87% |
| நாடகமும் அரங்கியலும் | 100% |
| தகவல் தொழில்நுட்பம் | 98% |
| விவசாயமும் உணவுத்தொழில்நுட்பமும் | 100% |
| மனைப்பொருளியல் | 100% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 94.9% |

சித்தி பெற்ற மாணவர் விபரம்

**9A**

த.தர்ஷிகன் - 9A
பு.ஜெயவிகிர்தா - 9A

**8A**

இ.நிதீஸ்ராம் - 8AC
சி.ஜெதீசன் - 8AC
பா.சத்தியகுகன் - 8AC
இ.கிருஷிகா - 8AB
ஜெ.கஜேந்திகா - 8AB
வ.துளசி - 8AB
மு.சிந்துஜா - 8AC
கி.நிவேதிகா - 8AC
ச.சஜித்தா - 7ABC
வீ.ராஜ்குமார் - 7ABC
ந.கேகஜன் - 7ABC
ரா.தனீபன் - 7A2B
ரா.கபிலினி - 7ABS
பா.ஞானநிவாஜினி - 7ABC
ரா.லக்சனா - 7ABS
உ.தர்சினி - 7ABS
வை.சிந்துஜன் - 6A3B
த.துஜீவா - 6A3B
ம.மதுஷா - 6A3B
சி.செந்தூர்க்குமரன் - 6A2BC
ப.நர்த்தகி - 6A2BC
ச.அஹிம்சா - 6A2CS
ஸ்ரீ.ரம்ஜா - 5A4B
பா.ராதிகா - 5A4B
ம.கஜீபன் - 5A2B2C
ப.பிரதீபா - 5A2B2C
க.கஜசுமணி - 5A2B2C
ச.சாயிசன் - 5A2B2C
ப.நிதுர்சன் - 5A2C2S
வி.சங்கீர்த்தனன் - 5AB3C
ச.ஜதீசன் - 5A3CS
வே.லதுர்ஜா - 5A2B2C


த.தர்ஷிகன்


பு.ஜெயவிகிர்தா


இ.நிதீஸ்ராம்


சி.ஜெதீசன்



பா.சத்தியகுகன்


இ.கிருஷிகா


ஜெ.கஜேந்திகா


வ.துளசி


ச.சஜித்தா


வீ.ராஜ்குமார்


ந.கேகஜன


வே.லதுர்ஜா

**கிடைக்கப்பெற்ற புகைப்படம் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

சிறந்த பெறுபேற்றைப் பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களைப் பாராட்டுவதோடு நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டு கின்றோம்.


ரா.கபிலினி


பா.ஞானநிவாஜினி


ரா.லக்சனா


ஸ்ரீ.ரம்ஜா


உ.தர்சினி


வை.சிந்துஜன்


த.துஜீவா


ம.மதுஷா


சி.செந்தூர்க்குமரன்


ப.நர்த்தகி


ப.நிதுர்சன்


பா.ராதிகா


வி.சங்கிரத்தனன்


ம.கஜீபன்


ப.பிரதீபா


க.கஜசுமணி


ச.சாயிசன்


ச.ஜதீசன்

## சேவைநயப்பும் பிரிவுபசாரமும்

எமது கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான திரு து.பிரதீபன், திரு சிவசங்கரசர்மா, திருமதி அ.ரஜீவன், திருமதி ம.இராஜேந்திரா ஆகியோரதும் ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்ற திரு நா.இராஜன், அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற திரு சி.தயாபரன் ஆகியோருக்கும் பிரிவுபசார வைபவம் கடந்த மாதம் நடைபெற்றது. இந்நிகழ்வில் இவ் வாசிரியர்களது சிறந்த சேவையைப் பாராட்டியதுடன் எமது கல்லூரி ஆசிரிய சகோதரத் துவத்தினது அன்பளிப்பும் வழங்கி இவ்வாசிரி யர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவ்வாசிரியர்கள் மிகவும் சிறந்த அர்ப்பணிப்பான சேவை மூலம் எமது கல்லூரியின் வரலாற்றில் முக்கியமானதோர் தடத்தினைப் பதித்தவர்கள் என்றும் மேலும் உயர்வுகள் பெற்று சென்ற இடத்திலும் சிறப்புறப் பணியாற்ற இறையாசியை வேண்டுவதாகவும் அதிபர் அவர்கள் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.

திரு நா.இராஜன் அவர்கள் ஆசிரிய சகோதரதுவத்தினால் வழங்கப்பட்ட அன்பளிப்பினை எமது கல்லூரி சித்திர பாடத்துறை தொடர்பான மாணவர்க்குரியதாக அதிபரிடம் மீளவும் அன்பளிப்புச் செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாசிரியர்கள் சென்ற இடமெங்கும் சிறப்புறப் பணியாற்றி உயர்வு பெற தடம் செய்தியேட்டினூடாக நாமும் வாழ்த்துகின்றோம்.

## ஆசிரியர்களுக்கான தேசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம்

எமது கல்லூரி விளை யாட்டுத் துறை ஆசிரியர் திரு பா.மதனரூபன் அவர்கள் ஆசிரியர்களுக் கிடையே நடத்தப்பட்ட தேசிய



மட்ட விளையாட்டுப் போட்டியில் இரண்டு வெண் கலப் பதக்கங் களைப் பெற்று எமது கல்லூரிக்குப் புகழ் சேர்த்துள் எதுடன் தமக்கும் புகழ் சேர்த்துள்ளார். மிக்க மகிழ்ச்சியுடன் இவரைப் பாராட்டுவதோடு மேலும் சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.

**பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம்**

எமது கல்லூரி பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் 22.04.2011 வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்று.

### தமிழ் மொழித் தினம் - 2011

இவ்வாண்டுக்கான பாடசாலை மட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகள் நிறைவு பெற்றுள்ளன.

பேச்சு (பிரிவு II)
1. அ.கீர்த்தனன் 6A
2. செ.வித்தகி 7D
3. இ.சாயிதா 6E

கட்டுரை (பிரிவு II)
1. த.லதிசனா 7E
2. சி.சுலோயிகா 7E
3. ச.தர்மிகா 6F

பாவோதல் (பிரிவு II)
1. ந.கானப்பிரியா 7F
2. டே.கிருத்திகா 7D
3. சி.நிசாயினி 7E

வாசிப்பு (பிரிவு II)
1. செ.வித்தகி 7D
2. ப.சஜீபன் 7B
3. சி.சிந்துஜன் 6B

பேச்சு (பிரிவு III)
1. கு.மிகழினி 9E
2. சி.கார்த்திகா 9F
3. இ.பிரியங்கா 8F

கட்டுரை (பிரிவு III)
1. சி.கிருசிகா 9D
2. சி.சோபனா 8D
3. சு.பானுஷா 8F

பாவோதல் (பிரிவு III)
1. க.ஹம்சாலினி 8D
2. கு.தக்ஷா 8E
3. சு.பானுசா 8F

பேச்சு (பிரிவு IV)
1. ச.மதுஷா 10D
2. ஸ்ரீ.கிறீடி 11A
3. பு.ஜெயவேணி 11F

கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும் (பிரிவு IV)
1. நா.கோதண்யா 11D
2. பி.பிறேமிஷா 11D
3. ந.சிந்துபைரதி 10D

பாவோதல் (பிரிவு IV)
1. த.புஷ்பவேணி 11D
2. க.சோபிதா 11F
3. பா.துவாரகா 11F

கவிதை (பிரிவு IV)
1. பி.பிறேமிஷா 11D
2. பு.ஜெயவேணி 11F
3. கோ.இந்துசா 11F

சிறுகதை (பிரிவு IV)
1. பு.ஜெயவேணி 11F
2. பொ.கஸ்ரோ 11A
3. நா.கோதண்யா 11D

குறுநாடகப் பிரதியாக்கம் (பிரிவு IV)
1. இ.கிரிசாந்தன் 11C
2. சி.சிரேஸ்கீதன் 11A
3. வை.யாழினி 11D

இலக்கணம் (பிரிவு IV)
1. யோ.கபீர்த்தனா 11E
2. இ.ஆராதனா 11E
3. பி.பிறேமிஷா 11D

பேச்சு (பிரிவு V)
1. த.வறாகினி 13A2
2. அ.லோஜனா 12A3
3. பா.சாருமதி 12A3

தமிழியற் கட்டுரை இலக்கியம் நயத்தல் (பிரிவு V)
1. சி.சோபிதா 12A3
2. இ.இராஜப்பிரவிந்தன் 12B
3. சு.ரேசியா 12A3

இலக்கணம் (பிரிவு V)
1. சி.சோபிதா 12A3
2. கி.லோஜனா 12A4
3. ஸ்ரீ.சரண்ணியா 12A2

திறனாய்வு (பிரிவு V)
1. க.பிரியதர்சனா 13A3
2. பா.அனித்தா 12A2
3. ஸ்ரீ.சரண்ணியா 12A2

கவிதை (பிரிவு V)

1. அ.லோஜனா ஜாக்குலின் 12A3
2. க.பிரியதர்சனா 13A3
3. சி.சிந்துஜா 12A3

சிறுகதை (பிரிவு V)

1. கு.பவிதா 12A3
2. ச.வேணுகானன் 12A4
3. ஜெ.நிரோஜா 13A4

இசை (தனி) (பிரிவு II)

1. டே.கிருத்திகா 7D
2. கு.பூர்ணிமா 6F
3. பி.தனுஷ் 6A

இசை (தனி) (பிரிவு III)

1. ச.விஷாகன் 9A
2. வி.மதனிகா 8D
3. கோ.ஆனந்தகிருஷ்ணனன்9A
4. சி.ஜனந்தன் 8B

இசை (தனி) (பிரிவு IV)

1.ம.பிரசாந்தினி
2.ப.கவிதா
3.பா. சஜுபனா

இசை (தனி) (பிரிவு V)

1. தி.ஆரணி 13A1
2. கு.ஆரபி 12A4
3. அ.அமுதினி 12A

நடனம் (தனி) (பிரிவு II)

1. ந.சனோசா
2. ந.திவ்யா
3. பா.கௌசிகா

நடனம் (தனி) (பிரிவு III)

1. வி.நிதுஷா
2. சி.கார்த்திகா
3. சி.லவீனா

நடனம் (தனி) (பிரிவு IV)

1. தி.நவலாஜினி
2. இ.பபிலா
3. கு.கஜானி

நடனம் (தனி) (பிரிவு V)

1. லோ.மயூரதி
2. பா.கௌசிகா
3. கி.லோஜனா

விவாதம் (திறந்த போட்டி)

1. த.வராகினி
2. லோ.மயூரதி
3. கி.லோஜனா

தமிழறிவு வினாவிடை(திறந்தபோட்டி)

1. சி.சோபிதா
2. க.நாககிருத்திகா
3. சு.ரேசியா
4. ம.பவதாரணி
5. ப.நிரோஜா

சமூக நாடகம்

1. ச.நர்மதா
2. கோ.இந்துசா
3. ப.கார்த்திகா
4. மு.சிவகேமா
5. ந.கமல்ராஜ்
6. ச.வேணுகானன்
7. இ.தர்மிகா
8. இ.கிருஷ்ணாகர்
9. த.முகிதாயீஸ்வரி
10. கு.கௌசிகா
11. ந.ரஜீந்திரன்
12. ஸ்ரீ.நிதுர்ஷன
13. யே.இந்துசன்

இசைநாடகம் (திறந்த போட்டி)

1. ச.வேணுகாணன்
2. இ.தர்மிகா
3. த.நிதர்சனா
4. ந.கானுப்பிரியா
5. யோ.இந்துஷன்
6. ந.றஜீந்திரன்
7. க.கஜீபன்
8. இ.டசிருபா
9. இ.மதுரங்கா
10. தி.துவாரகா
11. செ.வித்தகி
12. நி.சாரங்கா
13. டே.கிருத்திகா
14. லோ.மிருணாளன்

நாட்டார் பாடல்

1. ந.கவிப்பிரியா
2. ஜெ.ஜங்கரன்
3. ம.சுதர்மினா
4. வ.சஞ்சிகா
5. க.பவதாரணி
6. சி.கானுஜா

நடனம் குழு

1. சி.கார்த்திகா
2. சி.லவினா
3. ஈ.வித்தகி
4. த.யதுர்ஷா
5. த.ரசினா
6. நி.சங்கவி
7. வ.லிஷாயினி
8. இ.அபிநயா
9. கு.மகிழினி
10. கு.தரண்யா

11. உ.சங்கவி
12. அ.மீதுஷா

**இசை குழு II**

1. க.கௌமிலா
2. பா.ஜீவிகா
3. கு.ஆரபி
4. அ.அமுதினி
5. செ.சிந்தூரியா
6. க.கஸ்தூரி
7. ப.சஜீபனா
8. க.சண்பிகா
9. ப.கவிதா

## மாவட்டத்தில் முதலிடம்

அண்மையில் நடைபெற்ற மாவட்ட மட்டத் தமிழ்மொழித்தினப் போட்டியில் எமது கல்லூரி இசை நாடகம் முதலிடம் பெற்றுள்ளது. எமது கல்லூரியில் இது புதியதொரு சாதனை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களையும், இதனை நெறிப்படுத்திய திரு கு.ஜோதிரட்ணராஜா ஆசிரியரையும் இக் குழுவினரின் முயற்சிக்கு உறுதுணையாக பணியாற்றிய செல்வி எஸ் துஸ்யந்தி, திருமதி வி.மகேந்திரன், திரு எஸ் செல்வரமணன் ஆகிய ஆசிரியர்களையும் தடம் செய்தியேட்டினூடாகப் பாராட்டுகின்றோம். மேலும் இக் குழுவினர் நடைபெறவுள்ள மாகாணப் போட்டியிலும் வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

## பாராட்டுகின்றோம்



எமது கல்லூரி சித்திர பாட ஆசிரியர் திரு ந.இராஜன் அவர்கள் ஆசிரிய ஆலோசகராகப் பதவியுயர்வு பெற்று தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குச் சென்றுள்ளார். தடம் செய்தியேட்டின் கணனி வடிவமைப்பாளராக திறம்படப் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். சென்ற இடமெங்கும் சிறப்புறப் பணியாற்றி மேலும் உயர்வுகள் பெறவேண்டுமென பாராட்டுவதில் பேருவகை அடைகின்றோம்.

10. ம.பிரசாந்தினி

**இசை குழு I**

1. ஸ்ரீ.சிவஜா
2. ச.வானதி
3. வி.மதனிகா
4. ர.விகாணி
5. கு.தக்சா
6. ம.யாழினி
7. ந.கானப்பரியா
8. ஜெ.சைந்தவி
9. த.தீபதா
10. டே.கிருததிகா

## வரவேற்கின்றோம்

எமது கல்லூரியில் புதிதாக இணைந்த ஆசிரியர்களை வரவேற்கின்றோம்.

திருமதி ந.பாஸ்கரன் - கணிதம்

திரு S.ஞானரதன் - BSC

திரு S.செல்வரமணன் - சித்திரம்

திரு S.நவநீதன் - கணிதம்









எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு இவ்வாசிரியர்களது அர்ப்பணிப்பான சேவையை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

♦ எமது கல்லூரியில் உள்ளகப் பயிற்சிக்காக இவ்வண்ட இணைந்து கொண்ட ஆசிரியர்களை அன்போடு வரவேற்கின்றோம். இவர்கள் வாண்மை விருத்தி பெற வாழ்த்துகின்றோம்.

செல்வி செ.தாட்சாயினி - விஞ்ஞானம்

செல்வி யோ.சசிந்தா - சங்கீதம்

> *உடன்வாழும் உயிர்களில் ஏதாவது ஒன்றுக்காவது உன்னால் மனமகிழ்ச்சியைக் கொடுக்க முடியுமானால் உன்வாழ்க்கையின் இலட்சியம் நிறைவேறிவிட்டது.*

## A Trip to Bhutan.



Our school student Ms.Arany Thirugnanasampanthar of Grade 11 had a chance to participate in the first SAARC Scout Friendship camp which was held in Thimphu, Bhutan from 21st march to 27th March 2011. She was the only Tamil Girl Scout selected from Sri Lanka to participate in the camp. About 130 scouts participated in this camp.

She had a chance to visit the important places like Paro- the famous place in Bhutan, Taksang Monastery – one of the ancient historical places in Bhutan. Druk Wangyel Lhakhang, and "Buddha Point" – which is like our Dambulla golden temple. She also had a chance to see the sight seeing in Thimphu town. She enjoyed herself by visiting important places in Bhutan and had a chance to share the friendship with other scouts from various countries.

She is really lucky to have this opportunity which is really a valuable one. We are very proud about her and congratulate and wish her well for her future prospects. At the same time the teacher who is in-charge of scouts is to be congratulated.

## G.C.E. (O/L) English Results – 2010

We are very happy about our G.C.E (O/L) English results – 2010. Compared with last year's results there is much improvement. One hundred and eighty students (180) sat for the exam and 126 students passed. 31 students got and 15 students got B. The pass percentage is 70.8. The teachers who coached the students are to be congratulated.

- Empty vessels make more sound
- Fire is a good servant but a bad master
- Necessity is the mother of invention

ஒவ்வொரு பணியும் மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும். ஏளனம், எதிர்ப்பு, பிறகு கடைசியில் ஏற்றுக் கொள்ளப்படுதல். தனது காலத்தை விட்டு முற்போக்காகச் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் தவறாகவே புரிந்து கொள்ளப்படுவான். எனவே எதிர்ப்பும் அடக்குமுறையும் வரவேற்கத்தக்கவையே.

–சுவாமி விவேகானந்தர்–

# எமது நோக்கு



நாமும் எமது சமூகமும் எமது தேசமும் நலமாக உயர்வு பெற வேண்டுமானல் இன்றைய மாணவ உலகம் மிகச் சிறந்த ஆளுமையுடன் வளரவேண்டியதும், வளர்க்கப்பட வேண்டியதும் அவசியமாகும். அவரக்ளது ஆளுமை உயர்வடையும் போது சிறந்த தலைமைத்துவப் பண்பு கொண்டவர்களாக அவர்களால் உருவாக முடியும். அந்த ஆளுமை உருவாக்கத்திற்கு சமூகம், குடும்பம், சகபாடிகள் ஆகியோரும் அதிபர், ஆசிரியர்களும் முக்கிய பங்காளிகளாகின்றனர். இவர்களது மாணவர் சார்ந்த செயற்பாடுகள் ஒவ்வொன்றும் மிக அவதானத்துடன் கையாளப்பட வேண்டியனவாகும். மாணவரும் தமது பொறுப்பை உணர்ந்து சிறந்த பயன்தருகின்ற சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.

ஒரு சமூகம் உயிர்ப்புடன் திகழ்வதற்கும் ஆசிரியர்களின் பங்களிப்பு அவசியமாகின்றது. ஆசிரியர் தமது வெற்றிகரமான செயற்பாட்டிற்கு தெளிந்த மனமும், உன்னதமான ஆளுமையும், உள்ளார்ந்த அரப்பணிப்பும் உடையவராக விளங்குவதுடன் மாணவர்களையும் சிறந்த சமூகப் பிரஜைகளாக தலைமைத்துவப் பண்புள்ளவர்களாக உருவாக்குதல் வேண்டும். இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் எம்மையும் எமது சமூகத்தையும் நெறிப்படுத்தக் கூடிய ஆற்றல் உள்ளவர்களாக, சக்திபடைத்தவர்களாக உருவாக வேண்டும். மாணவரின் கல்வி இலக்குகள், சமூக இலக்குகள், தொழில் இலக்குகள் என்பவற்றைக் கண்டறிந்து அவற்றை அடைந்து கொள்ள வேண்டிய தூண்டல்களை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். தற்போது கல்வியின் நோக்கம் விரிவடைந்துள்ளது. மாணவரின் பலம், ஆற்றலில் கவனம் செலுத்துதல், சமூக ஆர்வத்தினை வளர்த்தல், உயர்பெறுபேறுகளை அடைய வழிகாட்டல் வாழ்க்கையில் வெற்றி, மகிழ்ச்சி என்பவற்றை எற்படுத்த ஆசிரியர் உதவ முடியும். சுய நம்பிக்கையுடையவனாக ஒவ்வொரு மாணவனையும் உருவாக்குவதில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

◆ வெளியீட்டாளர்:

திரு அ.கயிலாயபிள்ளை.(அதிபர்)
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)



ஆலோசனை:

திரு ந. பாலச்சந்திரன்
பிரதி அதிபர்



திரு.சி.த.இரத்தினம்
உப அதிபர்



## வெளியீட்டுக்குழு

◆ பிரதம ஆசிரியர் :
திரு க.முத்துலிங்கம்



◆ ஆசிரியர் :
திருமதி வி.மகேந்திரன் (தமிழ்)



திருமதி தே.கமலேஸ்வரன் (ஆங்கிலம்)



◆ கணனி வடிவமைப்பு.
திரு. ஆ.வைகுந்தன்



◆ கணனிப்பதிவு:
திருமதி க.நளாயினி



அனுசரணை: ஆசிரிய சகோதரத்துவம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தடம் NEWS LETTER

Web.WWW.ChC.sch.lk
Email.chavahindu@gmail.com

FROM , PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI

T.P.No:021 2270350/ 021 2270351

TO, ..........................................................
..........................................................
..........................................................
..........................................................